## மெதிரிகிரிய பிரதேச சபை

## பொலன்னறுவை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மெதிரிகிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உலக வங்கி கிராமங்களுக்கு இடையிலான செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 34,370,848 பெறுமதியான 02 வாராந்த சந்தைகள் மற்றும் சபையின் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான இடம் மற்றும் வாகனங்கள் சேவிஸ் பண்ணும் இடம் என்பவற்றை நிலையான சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பொப்கெட் இயந்திரத்திற்கான கொள்வனவு செய்திருந்த ரூபா 540,014 பெறுமதியான உபகரணங்கள் சபை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தியிருந்த போதிலும் நிதிக் கூற்றுகளில் களஞ்சி இரும்பு என காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஓய்வு பெறும் மண்டபத்தின் பெறுமதி ரூபா 1,066,890 இனை சொத்து ஒன்றாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) வாகனங்கள் சேவிஸ் பண்ணும் நிலையம் ஒன்றிற்காக கொள்வனவு செய்திருந்த சேவிஸ் பண்ணும் பண்டங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதி பொருட்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தினால் சபைக்கு வழங்கியிருந்த நீர் பவுசர் வண்டி மற்றும் கப் வண்டியின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) 2012 நவம்பர் 10 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த இலங்கை வங்கியில் பேணப்படும் கிராமங்களுக்கு இடையே ஆன செயற்திட்டம் தொடர்பான எதிர்வரும் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு விடயங்களுக்கான சேமிப்பு கணக்கில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படும் மீதி ரூபா 1,404,860 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(எ) 2013 ஆண்டின் போது மோட்டார் கிரேடர் இயந்திரத்தின் செயற்பாடுகளின் மூலம் வருமானம் ரூபா 235,350 இனை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்கு முன்னர் சபைக்கு கிடைத்திருந்த 03 நீர் பவுசர்கள், 03 டிலேலர்கள், டிரக்டர் ஒன்று, டிபர் வண்டி ஒன்று, பாதை தகர்க்கும் இயந்திரம், மோட்டார் படகு ஒன்று மற்றும் 04 துவிச்சக்கர வண்டிகள் என்பனவற்றின் பெறுமதியினை கணித்து நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 90,341,080 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

----------------------------------------

நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் முறையே ரூபா 6,647,799 தொகை மற்றும் ரூபா 7,500,814 தொகையும் 2015 ஜூன் மாதம் வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

(அ) சபையின் இயந்திரங்களின் மூலம் சேவைகள் பெற்றுக்கொண்டுள்ள சபை அங்கத்தவர்கள் 06 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 454,680 தொகையினை, பதிவு செய்திருக்கவில்லை. அத்துடன் 2015 ஜூன் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6 முதல் 20 ஆண்டுகள் இடைப்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்த பெற வேண்டிய 6 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,164,454 ஆகும்.

1.3.5 இணக்கமின்மைகள்

----------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) பிரிவு 129(2)(ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வதிவோரினால் செலுத்தப்படுகின்ற முத்திரை கட்டணங்களின் பணத் தொகை மற்றும் கட்டணம் சபை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனினும் ரூபா 4,294,350 இற்கான தொகை ஒன்று உரிய அதிகாரிகளிடம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 132(ஏ) | 2014 ஆண்டின் போது ஜனாதிபதி அவர்களின் வரவேற்பு விழா செலவுகளுக்காக நேரடி செலவுகள் என ரூபா 193,160 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றிருந்தது ரூபா 100,000 இற்கான செலவுத் தொகைக்கு மாத்திரமே. |
| (ஆ) 203 அதிகாரி மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 2(1) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமாக காணப்பட்ட குரு கப் வண்டி ஒன்றும், 03 டிரேலர்கள், 2 கியூப் டிபர் வண்டி ஒன்று மற்றும் 05 நீர் பவுசர்கள் என்பன மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 1988 இன் பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாக) விதி | |
| விதி இலக்கம் 203,214 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணப்பீடு ஒன்று மேற் கொண்டிருக்கவில்லை. |
| (ஈ) 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட வடமத்திய மாகாண முதலமைச்சரின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் விதி 1(iii) | பிரதேச சபைக்கு வாகனம் ஒன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று தனியார் வாகனங்களுக்காக செலவுகள் மேற்கொள்ள முடியும் எனினும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 131,500 தொகையொன்று தனியார் வாகனங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. |
| (உ) உள்ளூராட்சி மறு சீரமைப்புச் சுற்றுநிருப இலக்கம் 03 | |
| 3.1 | சபைக்கு சொந்தமான அரசாங்க காணிகள் மற்றும் கட்டடங்களுக்காக உரிமைப்பத்திரங்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 3.6 மற்றும் 3.7 | அனைத்து சொத்துக்கள் பற்றிய வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளல் மற்றும் குறிப்பிட்ட அளவு காணப்படுகின்றனவா என தேடிப்பார்ப்பதற்காக பல வருடங்களுக்கு ஒரு முறையேனும் காணிகளை |

அளவை மேற்கொள்ளப்பட வேண்டும். காணிகளின் எல்லைகளை அடையாளமிட்டு அவ் எல்லைகளை உறுதிப்படுத்துவதற்காக அவற்றை சுற்றி கம்பி வேலிகள் பொருத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,040,603 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,864,658 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 783 | 640 | 2,236 |
| (ii) | வாடகை | 15,591 | 8,551 | 195 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,520 | 1,404 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 109,734 | 28,075 | 31,518 |

2.2.2 வீதவரி

----------

மீளாய்வாண்டிற்காக பில் போடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 640,311 ஆக காணப்பட்டதுடன் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 2,236,042 ஆக காணப்படாமையால், நிலுவை வருமானம் சபையின் வருடாந்த வருமானத்தில் 349% ஆகும். இதன் பிரகாரம் வீதவரி வருமானம் சேகரித்தலில் பலவீன நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,557,586 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,294,350 தொகையும் ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

சபையின் பின்வரும் சொத்துக்கள் அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ள காலப்பகுதி முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் விபரம் | பெறுமதி | பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட காலம் |
|---|---|---|
| | ரூபா | |
| அரிசி மா நிலைய கட்டடம் | 1,800,000 | 05 வருடங்கள் |
| மிட்சுபிசி கப் வண்டி | 180,000 | 06 வருடங்கள் |
| அரிசி மா உற்பத்தி உபகரணத் தொகுதி | 650,000 | 07 வருடங்கள் |
| கொங்கிரீட் கலவை இயந்திரம் | 240,000 | 02 வருடங்கள் |
| அச்சுக் கல் இயந்திரம் | 130,862 | 02 வருடங்கள் |
| பாதை தகர்க்கும் இயந்திரம் | பெறுமதி குறிப்பிடப் படவில்லை | 08 மாதங்கள் |

3.2 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

(அ) சபைக்கு சொந்தமாக சிற்றுண்டிச்சாலை கட்டடத்தை வாடகைக்குப் பெற்றவர்களினால், உடன்படிக்கையின் பிரகாரம் சிற்றுண்டிசாலை 2013 ஆண்டு முதல் செயற்பட்டிருக்காத போதிலும் அதனை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய வைப்புக்களில் அடங்கியுள்ள ரூபா 3,014,210 தொகை 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட 38 செயற்திட்டங்கள் தொடர்பாக, தடுத்து வைத்த பணத்தை விடுவிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் வாடகைக்கு கொடுத்தல், நீர்க் கட்டணம், பதிவுச் சான்றிதழ் மற்றும் பரிசோதனை கட்டணம், வழங்குனர்களை பதிவு செய்தல், களியாட்ட வரி மற்றும் அறவிடப்படக் கூடிய கட்டணம் ஆகிய வருமான உப தலைப்புக்கள் தொடர்பாக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே நூற்றிற்கு 30 உம் நூற்றிற்கு 100 இடையே முரண் ஒன்று காணப்பட்டது.

3.4 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் போதியளவு கணக்காய்வு ஒன்று பிரதேச சபையில் செயற்படுத்தியிருக்கவிலிலை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுபாடு